DINAMALAR
National Tamil Daily

# தேசிய வன உயிரின வார விழா நேரலையில் கொண்டாட்டம்

**கோவை, அக்.9–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்பட்டு வரும், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில், தேசிய வன உயிரின வார விழா கொண்டாடப்பட்டது.

'பேஸ்புக் லைவ்' வாயிலாக நடந்த இந்த விழாவில், 'வனவிலங்குகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்' என்ற தலைப்பில், சொற்பொழிவு போட்டி நடத்தப்பட்டது.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர் அறிமுக உரையாற்றினார். நிறுவன இயக்குனர் முனைவர் குஞ்சிகண்ணன் பேசுகையில், ''உணவுச் சங்கிலியில் வனவிலங்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது ஒரு உயிரினத்திலிருந்து, மற்றொரு உயிரினத்திற்கு ஆற்றல் எவ்வாறு மாற்றப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. உணவுச்சங்கிலியை உருவாக்கும் முக்கியமான உயிரினங்கள் எவை, சூழலியல் எவ்வாறு சமநிலையில் உள்ளது என்பதை, அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்,'' என்றார்.

ஆன்லைன் சொற்பொழிவு போட்டி முடிவுகளை, தலைமை நடுவர் ஜான் பிரசாந்த் ஜேக்கப் அறிவித்தார். செங்கல்பட்டு பிரசன் வித்யா மந்திர் மாணவி சுப்ரஜா முதலிடம், கோவை ஜி.ஆர்.டி., பப்ளிக் பள்ளி மாணவர் ஸ்ரேயாஸ் இரண்டாமிடம், கோவை வித்யா நிகேதன் பள்ளி மாணவி ஹன்சிகா மூன்றாம் இடம் பெற்றனர்.

வனவிலங்கு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும், விழிப்புணர்வு சுவரொட்டி நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. என்விஸ் திட்ட அலுவலர் முனைவர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

232. News in Dinamalar, Coimbatore, 09.10.2020, Wildlife Week Celebrations by IFGTB ENVIS.